THE COVAI MAIL
ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER
04 வாரஇதழ் 8 - 14 செப்டம்பர் 2018

# புரட்சியாளர் விருது



கே.பி.ராமசாமிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்குகிறார் ஊரக மேம்பாட்டு துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி.

தி கோவை மெயில்

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளி மாணவ, மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் அண்மையில் புரட்சியாளர் விருது வழங்கப்பட்டது.

கே.பி.ஆர். கல்வி நிறுவனங்கள் மற்றும் யூஆர்லவ்டு என்ற சமூக அமைப்பும் இணைந்து புரட்சியாளர் விருது வழங்கும் விழாவினை இவ்வாண்டு சிறப்பாக நடத்தின. அறிவியல் மற்றும் கண்டுபிடிப்பு, தலைமைத்துவம், சமூக அக்கறை, கலை, மாற்றுத்திறனாளிகள் மீது கரிசனை, விளையாட்டு போன்ற பிரிவுகள் அடிப்படையில் 67 மாணவர்களுக்கும், 33 ஆசிரியர்களுக்கும் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி விருது வழங்கினார்.

கே.பி.ஆர். நிறுவனத் தலைவர் கே.பி.ராமசாமி, தலைமை நிர்வாகி ஏ.எம். நடராஜன், கேபிஆர் தொழிநுட்பக் கல்லூரி முதல்வர் பொம்மண்ணராஜா, கேபிஆர் நிறுவனத்தின் பொது மேலாளர் முனுசாமி, கேபிஆர் கலை, அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி முதல்வர் பாலுசாமி ஆகியோர் தலைமை வகித்தனர். எம்.பி. ஆர்.நடராஜன் பங்கேற்றார்.

'யூ ஆர் லவ்டு' தொண்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டானியல் ஜேக்கப், இவ்விருது வழங்கும் விழாவின் பின்னணியை விளக்கி, மாணவர்களை ஊக்குவிப்பதன் மூலம் நம் நாட்டின் எதிர்காலத்தை மாற்ற முடியும் என்பதை எடுத்துக் கூறினார்.

தொழில் முனைவர்கள், மனிதவள மேம்பாட்டு அதிகாரிகள், திரை உலகப் பிரமுகர்களும், நிறுவனத் தலைவர்களும் மற்றும் பலர் இவ்விருது வழங்கும் விழாவில் பங்கேற்றனர்.